24th March 1958]

Sri S. LAZAR : இந்த ஜிப்ஸி ஜாதியார் மாகாணம் பூராவும், குறிப்பாக திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் நிறைய இருக்கிறார்கள். இவர்கள் முன்னேறுவதற்கு ஒரே இடத்தில் தங்கி வசிக்க ஏற்பாடுகள் செய்வதற்கு ஒரு பொதுவான திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : மாகாணத்தில் உள்ள நரிக்குறவர்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் வைக்க முடியாது, இருக்கவும் மாட்டார்கள். எங்கெங்கு பாடசாலைகள் வைக்க முடியுமோ, எங்கெங்கு ஹாஸ்டல் நடத்த முடியுமோ அதையெல்லாம் கவனித்து இயன்ற உதவி செய்யப்படும்.

Sri M. JAGANNATHAN : நரிக்குறவர்கள், இன்னும் அவர்களைப் போன்ற நாடோடி மக்களை ஒரே இடத்தில் வைத்தால் அவர்கள் வசிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். இவர்களை ஒரே இடத்தில் வசிக்க ஏதாவது சர்க்கார் முயர்ச்சி எடுத்துக்கொண்டார்களா? அந்த முயற்சியில் தோல்வி ஏற்பட்டதா?

The Hon. Sri P. KAKKAN : மதுரை ஜில்லாவில் வசிக்க ஏற்பாடு செய்தோம். அவர்களுடைய பையன்கள் படிக்க ஹாஸ்டல் ஏற்பாடு செய்தோம். அவர்களாகச் சில பேர் போய்விட்டார்கள். சில பேரை பெற்றோர்கள் கட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். இன்னும் இவர்களைக் கட்டாயப்படுத்தி என்னென்ன வசதி செய்துகொடுக்க முடியுமோ, அவைகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கும்.

Mr. SPEAKER : இப்போழுது கனம் தொழில் அமைச்சர் வந்துவிட்டார். 379-ம் கேள்வி எடுத்துக்கொள்ளப்படும்.

Labour Gazette

* 379 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have under consideration any proposal to publish a *Labour Gazette* every month; and

(*b*) if so, when the first issue is likely to be published?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The proposal is under consideration of the Government.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், இந்தத் தொழில் கெஜட்டைத் தயார் செய்து வெகு விரைவில் தமிழில் கொண்டுவருவதன் மூலம் தொழிலாளர்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் பெரும் அளவுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, இதை வெகு விரைவில் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : இது முதலில் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படும். அதைத் தமிழ்ப்படுத்துவதைப்பற்றி பின்பு யோசனை செய்யப்படும்.

Sri P. G. MANICKAM : இந்தத் தொழில் கெஜட் மாகாண ரீதியில் ஏற்படுத்தப்படுமா அல்லது ஜில்லா ரீதியில் ஏற்படுத்தப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இது லேபர் கெஜட். மாகாண ரீதியாகப் பப்ளிஷ் செய்யப்படும்.

[24th March 1958

Sri A. V. P. ASAITHAMBI : இந்தத் தொழில் கெஜட்டை வெளியிடுவதில் இப்போது பேப்பர் வெளி நாட்டிலிருந்து வந்துகொண்டிருக்கிறது—அதோடு உள்நாட்டில் செய்யப்படும் கைத்தொழில் பேப்பர் இருக்கிறது. இந்த உள்நாட்டு கைத்தொழில் பேப்பரையோ அல்லது நேபா நியூஸ் பிரிண்ட் போன்ற பேப்பரில் வெளியிட்டு ஊக்குவிக்க சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்குத் தனியாக கேள்வி போடவேண்டும்.

Sri S. LAZAR : இந்த லேபர் கெஜட்டில் இருக்கப் போகின்ற முக்கியமான அம்சங்கள் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : மாதா மாதம் தொழிலாளர் சமூகத்திலே ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள், தொழிலாளர் சட்டங்கள், முக்கியமான கோர்ட் தீர்ப்புகள், இன்னும் விசேஷமான கட்டுரைகள் இருந்தால் அதுவும் பிரசுரிக்கப்படும். இதைத் தவிர புள்ளி விவரங்கள் முக்கியமாகக் கொடுக்கப்படும். காஸ்ட் ஆப் லிவிங் இன்டெக்ஸ், மற்ற விசேஷ லேபர் சட்டத்தின்கீழ் வரக்கூடிய புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படும.

Sri M. JAGANNATHAN : இந்த தொழில் கெஜட் வெளிவரும் போது, இது சட்ட சபை அங்கத்தினர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இது சாதாரண கெஜட் போலல்ல. விசேஷமாகப் பிரசுரிக்கப்படுவது. இதைப் பணம் இல்லாமல் கொடுப்பதைப் பற்றி யோசனை செய்யவேண்டும். இதனுடைய செலவை யார் கொடுப்பது என்று இன்னும் நிர்ணயிக்கவில்லை. எல்லாவற்றையும் யோசித்துச் செய்யப்படும்.

Sri A. V. P. ASAITHAMBI : ஸார், இந்தத் தொழில் கெஜட்டை இப்பொழுது "சென்னைச் செய்தி" என்கிற தமிழ் ஏடு, "மெட்ராஸ் இன்பர்மேஷன்" என்ற ஆங்கில ஏடு இவைகளோடு இன்னும் சில பக்கங்கள் சேர்த்து வெளியிட்டால் செலவு குறையுமல்லவா? அந்த மாதிரிச் செய்வதில் என்ன சிரமம் இருக்கிறது?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் ஆசைத்தம்பி அவர்களுடைய யோசனையை பாராட்டுகிறேன். இதைத்தான் சர்க்கார் கூடச் சொன்னார்கள். ஆனால் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று சொல்லி தனியாக கெஜட் பிரசுரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

Sri K. B. S. MANI : இந்தத் தொழிலாளர்கள் என்பவர்கள் அநேகமாகத் தமிழ் மட்டும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தும் இந்த கெஜட்டை தமிழிலேயே பிரசுரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, தமிழில் பிரசுரிக்க அவசர நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இன்றைக்கு தொழில் கோர்ட் நடவடிக்கைகள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. இது சம்பந்தமாக நாம் தயாரிக்கிற பல விஷயங்கள் எல்லாம் ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து சேகரிக்கிறோம். உடனடியாக இதைத் தமிழில் பிரசுரிப்பது சாத்தியமல்ல. கொஞ்ச காலம் ஆங்கிலத்தில் பிரசுரித்து பிறகு தமிழில் பிரசுரிக்க யோசிக்கலாம்.

Sri A. A. RASHEED : What will be the cost of a copy of the *Labour Gazette?*

The Hon. Sri R. VENKATARAMAN : It has not yet been fixed.